# ஓம் ஶ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை நேரம் வினா எண் 338
# தலைப்பு "தெய்வீகத்தை அடைதல்"
# நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் இரண்டு பக்கம் 242-248லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி

கேள்வி:ஸ்வாமி எங்கள் உள்ளேயே இருக்கும் தெய்வீகத்தை நாங்கள் எவ்வாறு உணர்ந்து கொள்வது

ஸ்வாமியின் பதில்:நீங்கள் கல்லூரியில் விருப்ப பாடமாக கணிதம் பௌதீகம் வேதியல் அல்லது உயிரியல் என தேர்வு செய்து கொள்கிறீர்கள் இல்லையா.அது போல ஆன்மீக பயற்சியிலும் நீங்கள் மூன்று பாடங்களை கற்க வேண்டும்.
பக்தி ஞானம் வைராக்கியம் என்பவை தான் அவை.
பக்தி இல்லாமல் ஞானத்தை பெற இயலாது.
பக்தியே ஞானத்திற்கு இட்டு செல்கிறது.
ஞானம் இல்லாமல் உலக பற்றுதலை துறக்க இயலாது.
ஞானமே வைராக்கியத்திற்கு இட்டு செல்கிறது.

ஒரு மலர் காயாகி பின்னர் தானே பழமாகிறது.இந்த மாற்றத்திற்கு சிறிது கால நேரம் பிடிக்கிறது அல்லவா.
பக்தி ஞானமாக மாறி உலகப் பற்றுதலை விட்டு பற்றற்ற நிலைக்கு செல்லும் போது தான் உங்கள் உள்ளே உறையும் தெய்வீகத்தை உங்களால் உணர்ந்தறிய முடியும்.ஞானத்தின் உயர்ந்த நிலையே சரணாகதி எனப்படுவதாகும்.இந்த இடத்தில் முக்கியமான ஒன்றை நீங்கள் மறந்து விட கூடாது.ஞானம் ஜபம் தியானம் யக்ஞம் இவை எல்லாவற்றையும் விட ஆன்மீக பயிற்சிகளில் கடவுள் மீது நீங்கள் கொள்கின்ற அன்பு தான் முக்கியமானது.அதுவே பக்தியாகும்.
அறிவு என்பது இரண்டு வகையானது.ஒன்று புற உலகம் சார்ந்த லௌகீக அறிவு.மற்றது ஆன்மீகம் சம்மந்தப்பட்ட தெய்வீக பேரறிவு.அது இரட்டை தன்மை இல்லாதது.அதுவே சாதகரை தெய்வீகத்தை உணர செய்கிறது.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி நாங்கள் தெய்வீக பேரானந்தத்தை எங்களுள் எப்போது அனுபவிக்க முடியும்.

ஸ்வாமியின் பதில்:ஆன்மீக சாதகர்கள் பலரும் இது போன்ற குழப்பத்திற்கு ஆளாவதை பார்க்க முடிகிறது.அவர்கள் ஆசிரமத்தில் தங்கியிருந்தாலும் சிரமத்திற்கு ஆளாகிறார்கள்.ஒரே ஒரு அறிவுரையை

கூட நடைமுறை வாழ்க்கையில் கடைபிடிக்காமல் தங்களை பக்தர்கள் என பலரும் கூறி கொள்வது வெட்கமானது.
பக்தர் என்பவரின் வாழ்க்கை பரிசுத்தமானதாக,அமைதியானதாக,உலக பற்றினை விட்டு விட்டதாக இருக்க வேண்டும்.
அவர் ஆத்மானந்தத்தை பெற ஏங்குபவராக இருக்க வேண்டும்.
அளவில்லாத ஆசைகள்,அர்த்தமற்ற கவலைகள்,பதட்டம் இவையெல்லாம் ஆன்மீக முன்னேற்றத்திற்கு தடையானவை.
இதனால் பலராலும் தெய்வீக ஆனந்த்தை அனுபவிக்க முடியாமலேயே போய்விடுகிறது
உடல் மீது வைக்கும் பற்று நிலைமையை இன்னும் மோசமாக்குகிறது.தெய்வீக ஆனந்தத்தை அனுபவிக்க மூன்று பண்புகள் அவசியமானவையாகும்.
வெளியுணர்வு புலன்கள் மற்றும் உள்ளுணர்வு புலன்களை கட்டுப்படுத்துவது,மன திருப்தி, ஆத்ம விசாரணை,நல்லோர் சேர்க்கை இவை அவசியமானதாகும்.இவையே சாதகருக்கு தெய்வானந்தத்தை பெற்று தருகிறது.இந்த தெய்வானந்தம் என்ற பொக்கிஷம் உங்களின் சாதரண உடலிலேயே இருக்கிறது.
உங்கள் உடல் இரண்டு வாளி நீர், ஒரு வாளி சுண்ணாம்பு,இரண்டு இன்ச் இரும்பு,ஆறு பென்சில் அளவு காரீயம்,தொள்ளாயிரத்து இருபது தீக்குச்சிகளில் உள்ள அளவுக்கு பாஸ்பரஸ்,மற்றும் நான்கு லக்ஸ் சோப்பில் உள்ள அளவிற்கு கொழுப்பு இவைகளால் ஆனது.இதற்குள்ளே தெய்வீக ஆத்மா உறைகிறது.
இடைவிடாத சுய விசாரணை மூலம் மட்டுமே ஆத்மாவை உணர்ந்து அனுபவிக்க முடியும்.

அடுத்த கேள்வி:ஸ்வாமி
நாமஸ்மரணா,பூஜா,தியானம் என பல்வேறு ஆன்மீக பயிற்சிகள் பரிந்துரைக்கப்பட்டாலும் எங்களால் ஒன்றில்கூட தொடர்ந்து ஈடுபட முடிவதில்லை.இதனால் அதிருப்தியும் விரக்தியும் உண்டாகி நமக்கு எந்த ஆன்மீக முன்னேற்றமும் ஏற்படவில்லையே என ஏமாற்றமாக இருக்கிறது.எதனால் இப்படி நிகழ்கிறது.
எங்களுக்கு ஒரு நல்ல வழி காட்டுங்கள் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
நிலத்தை உழுது களை எடுத்து உரமிட்டு நீர் பாய்ச்சி விதை விதைத்தால் தானே பயிர் விளையும்.இது எதையுமே செய்யாமல் நல்ல விதைகளை விதைத்தால் மட்டும் பயிர் விளையுமா.
அது போல வாழ்க்கையில் நான்கு புருஷார்த்தங்கள் அதாவது இலக்கை அடைய வேண்டும் என்றால் நீங்கள் நவ வித பக்தி,அஷ்டாங்க யோகா போன்ற ஆன்மீக பயற்சிகளில் முறையாக ஈடுபட்டு வர வேண்டும்.

இறைவனுடைய பக்தன் ஆக வேண்டும் என்றால் நீங்கள் நான்கு முக்கியமான பண்புகளை வளர்த்து கொள்ள வேண்டும்.
மைத்ரி-அதாவது நட்பே முதலாவது.
உங்களுக்கு மேலானவர்களுடன் நட்பு கொண்டால் அவர்கள் உங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவார்கள்.கீழ் நிலையில் உள்ளவர்களுடன் நட்பு கொண்டால் நீங்கள் அவர்களை தாழ்வாக நடத்துவீர்கள்.
எனவே நட்பு என்பது சமமானவர்களுடன் ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.
அடுத்த பண்பு கருணா.
நடைமுறை வாழ்க்கையில் நீங்கள் எல்லா சமயங்களிலும் கருணையோடு நடந்து கொள்ள முடியாது.எனவே ஏழை எளியவர்கள்,நோயுற்றோர்,மாற்று திறனாளிகள்,கல்வி அறிவில்லாதவர்களிடத்தில் எப்போதும் கருணையோடு நடந்து கொள்ளுங்கள்.
அதுவே உங்கள் கருணைக்கு மதிப்பை கொண்டு சேர்க்கும்.
அடுத்த பண்பு முதித.
எதை கண்டும் நீங்கள் பொறாமை கொள்ள கூடாது.
உங்களைவிட நல்ல நிலையில் இருப்பவர்களை பார்த்து நீங்கள் பொறாமை கொள்ள கூடாது.
அவர்களின் முன்னேற்றம் கண்டு நீங்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும்.
நான்காவது உபேக்ஷ.இதற்கான எதிர் பதம் அபேக்ஷ.
உபேக்ஷ என்பது உலக பற்று இல்லாத நிலை ஆகும்.

தீய நடத்தை கொண்டவர்களுடன் சேர்ந்து விடாதீர்கள்.அவர்களின் தீய செயல்களுக்கு ஒரு போதும் ஆதரவாக இருக்காதீர்கள்.
அவர்களுடன் நட்பு பாராட்டி பழகிட வேண்டாம்.
இத்தகைய நான்கு பண்புகளையும் வளர்த்து கொண்டால் நீங்கள் வாழ்க்கையின் இலக்கை அடைந்து விடலாம்.
இந்த நல்ல குணங்களை வளர்த்து கொள்ள மனதூய்மை வேண்டும்.
அதற்கு ஏகாத்ம பாவம் அதாவது ஒரே இறையே பல உருக்கொண்டு எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார் என்ற ஆழ்ந்த புரிந்துணர்வு ஏற்பட வேண்டும்.
அப்போது மனத்தூய்மை கிட்டி விடும்.
தமோ மற்றும் ரஜோ குணங்களை விடுத்து சம நிலையுடன்கூடிய சத்வ குணத்தை வளர்த்து கொள்ள வேண்டும்.
அசுத்தமான தண்ணீரிலோ அல்லது ஆடிக்கொண்டிருக்கும் தண்ணீரிலோ சூரிய பிம்பத்தை சரிவர காண முடியுமா.ஆடாத சுத்தமான நீரிலே தான் சூரிய பிம்பத்தை நன்கு காண முடியும் அல்லவா.
எனவே சத்வ குணத்தை வளர்த்து கொண்டால்தான் நம்முளுறையும் ஆத்மாவே எங்கும் நிறைந்துள்ளது என புரிந்து கொண்டு ஆத்மானந்தத்தை அனுபவிக்க முடியும்.

சாத்வீக குணத்தையும் சித்த சுத்தியையும் பெறுவது எவ்வாறு.உங்களுடைய குற்றங்களைக் கண்டு களைந்து மற்றவர்களுடைய நிறைகள் கண்டு மகிழும் போது சம நிலையும் சித்த சுத்தியும் உண்டாகும்.உங்களிடம் எந்த குறையும் இல்லாமல் பார்த்து கொள்ளுங்கள்.ஆன்மிக பயிற்சி என்பது பக்தி மற்றும் பொறுமையை வளர்த்து கொள்ளவது தான்.

சுயநலத்திற்காக செய்யபடும் சாதனாவால் ஒரு பயனும் இல்லை.

பொறுமையும் பக்தியும் இல்லாத சாதனாவாலும் ஒரு பயனும் இல்லை.இந்த நான்கு பூருஷார்த்த குணங்களும் இல்லாவிட்டால் அமைதி ஆனந்தம் திருப்தி என எதையும் அனுபவிக்க முடியாது.எனவே இந்த நான்கு புருஷார்த்த குணங்களையும் நீங்கள் வளர்த்து கொண்டு பயனடைய வேண்டும்.

அனைவருக்கும் நன்றி.வர இருக்கின்ற நாட்களில் நம் ஸ்வாமியின் அருளுரைகளை மேலும் கேட்டு மகிழ்வோம்.

ஜெய் சாய்ராம்.